

# 24

# சிக்கனமும் சேமிப்பும்

(எட்டாம் பாடவேளைக்கான மணி ஒலிக்கிறது. இஸ்லாம் பாட ஆசிரியர் வகுப்பறைக்குள் ஸலாம் கூறியவாறு நுழைகிறார். மாணவர்கள் பதில் ஸலாத்துடன் ஆசிரியரை வரவேற்கின்றனர். ஆசிரியரின் வருகையுடனேயே வகுப்புத் தலைவர் ஸலீம் கைநிறைய வெண்கட்டிகளுடன் வகுப்பறைக்குள் நுழைகிறார். ஆசிரியரின் மேசை மீது வெண்கட்டிகளை வைக்கும்போது அதில் சில வெண்கட்டிகள் கீழே விழுந்து உடைந்து விடுகின்றன. அப்போது ஆசிரியர் ஸலீமைப் பார்த்து ''தேவைக்கு அதிகமான வெண்கட்டிகளை கைநிறைய ஏன் எடுத்து வந்தீர்கள்?'' என வினவுகிறார். ஸலீம் மௌனமாக இருக்கவே, தேவைக்கு அதிகமான வெண்கட்டிகளைக் கொண்டு வருவது வீண்விரயம் என்றும் எந்தவொரு பொருளையும் தேவைக்கு ஏற்றவாறு சிக்கனமாக பாவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். பின்னர் அன்றைய நாளில் கற்க வேண்டிய ''சிக்கனமும் சேமிப்பும்'' என்ற பாடத்தைக் கற்பிக்க ஆரம்பித்தார்.

ஆசிரியர் : இஸ்லாம் இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டும் மார்க்கம். அதன் போதனைகள் மனதுக்கு இதமானவை. அதனை நடைமுறைப்படுத்துவது இலகுவானது. அத்தோடு இஸ்லாம் நற்பண்புகள் நிறைந்த மார்க்கமுமாகும். அது எம்மில் தோற்றுவிக்க விரும்பும் நற்பண்புகளில் சிக்கனமும் சேமிப்பும் முக்கியமானவை.

நவீத் : சிக்கனமாக வாழ்தல் என்றால் என்ன ஸேர்?

ஆசிரியர் : சிக்கனமான வாழ்க்கை என்றால் உள்ளதைக் கொண்டு தேவையை கச்சிதமாக நிவர்த்தி செய்து கொள்வதாகும். அதாவது, உலோபித்தனத்துக்கும் வீண்விரயத்துக்கும் இடைப்பட்ட நிலையே சிக்கனம் என்பதாகும். அளவுக்கு அதிகமாக செலவு செய்வதைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். நடுநிலையாக செலவு செய்வதை நல்லடியார்களின் பண்புகளுள் ஒன்றாக அல்குர்ஆன் சுட்டிக் காட்டுகின்றது.



''மேலும் அவர்கள் செலவு செய்யும்போது வீண்விரயமும் கஞ்சத்தன மும் செய்வதில்லை. மாறாக, அவர்களுடைய செலவுகள் இந்த மித மிஞ்சிய இரு நிலைகளுக்கிடையில் மிதமானதாக இருக்கும்.'' (25: 67)

அயாத் : அளவுக்கு அதிகமாக செலவு செய்தல் என்றால் என்ன ஸேர்?

ஆசிரியர் : இதனை இன்று வகுப்பில் இடம்பெற்ற நிகழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஒரு வெண்கட்டி போதுமானதாக இருந்தால் அத்துடன் சுருக்கிக்கொள்வது சிக்கனமாகும். ஒன்றுக்கு மேல் பல வெண் கட்டிகளைப் பயன்படுத்துவது வீண்விரயமாகும்.

ஆகிப் : வீண்விரயம் செய்யாமல் சிக்கனமாக பயன்படுத்திய பின் மீதமான வற்றைப் பாதுகாப்பதைத் தானே சேமிப்பு என்கிறார்கள் ஸேர்?

ஆசிரியர் : ஆம். அதைத்தான் சேமிப்பு என்கிறோம். இவ்வாறு சேமிப்பதனூடாக இக்கட்டான சந்தர்ப்பங்களில் அவை நமக்கு உதவியாக இருக்கும். இது ஒரு சிறந்த பண்பு. இதனை அல்லாஹ் மனிதர்களில் மட்டுமன்றி சில படைப்பினங்களிலும் ஏற்படுத்தியுள்ளான். உதாரணமாக எறும்புகள் தமக்குத் தேவையான உணவை மாத்திரம் சாப்பிட்டுவிட்டு மீதி உணவைப் பத்திரமாகக் களஞ்சியப்படுத்துகின்றன. இதன் மூலம் மழை காலத்தில் உணவுத் தேவையை நிறைவு செய்துகொள்கின்றன. தேனீக்கள் தேனைச் சேமிக்கின்றன. இவை தேனீக்களுக்கு மட்டுமன்றி மனிதர்களுக்கும் பயன்படுகின்றன.

றயான் : ஸேர் அவ்வாறாயின், எமது தேவைகளைச் சிக்கனமாக நிறைவேற்றிய பின் சேமிப்பதன் மூலம் எதிர்கால சந்ததியினரும் பயன்பெறுவார்கள் அல்லவா?

ஆசிரியர் : மாஷா அல்லாஹ் நல்லதொரு கருத்து. சேமிப்பின் நோக்கங்களுள் இதுவும் ஒன்று. இவ்வாறான முன்மாதிரியான பண்புகளை நாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வாழ்விலும் கண்டுகொள்ள முடியும். அவர்கள் எப்போதும் சிக்கனத்தையும் எளிமையையும் விரும்பியுள்ளார்கள். அவர்களின் வாழ்வின் பல்வேறு நிகழ்வுகளில் இதனைக் காணலாம். அவர்கள் ஈச்சோலைப் பாயிலேயே உறங்கினார்கள். இதனால் அவர்களது விலாப்புறங்களில் அதன் அடையாளம் பதிந்திருந்தது. இதனைக் கண்ணுற்ற தோழர்கள் ''உங்களுக்கு பஞ்சனை மெத்தை ஒன்றைத் தயார் செய்து தரட்டுமா?'' என்று வினவினார்கள். அதனை ஏற்க மறுத்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ''பிரயாணி ஒருவன் மரநிழலில் தங்கி விட்டுச் செல்வது போன்றே நானும் இவ்வுலகை விட்டும் பிரிந்துசெல்ல விரும்புகிறேன்'' என்று கூறினார்கள். (முஸ்லிம்)

இவ்வாறு எளிமையாகவும் சிக்கனமாகவும் வாழ்ந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சேமிப்பதற்கும் அனுமதியளித்துள்ளார்கள். அவரின் மனைவியரில் சிலர் ஒரு வருடத்திற்குத் தேவையானவற்றை சேமித்து வைத்திருந்தனர். (இப்னு அஸாகீர்)

ஸலாஹ் : ஸேர், நீங்கள் அன்று யூஸுப் நபியுடைய வரலாற்றில் நிகழ்ந்த சேமிப்பிற்கான ஒரு பாரிய திட்டம் பற்றிக் கூறினீர்கள்தானே?

ஆசிரியர் : ஆம் ஸலாஹ், நீங்கள் நினைவுபடுத்திய விடயம் சேமிப்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். எகிப்து நாட்டில் மிகப் பெரும் வரட்சி ஒன்று ஏற்படப்போகின்றது என்பதனை அல்லாஹ்வின் உதவியினால் அறிந்து கொண்ட நபி யூஸுப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தானியங்களில் ஒரு பகுதியைத் தொடராக ஏழு வருடம் சேமித்தார். இவ்வாறு திட்டமிட்டு சேமித்த தானியங்களை வரட்சிக் காலத்தில் மக்களுக்கு விநியோகித்து உதவினார்கள். இதனால் அக்காலத்தில் நாட்டில் ஏற்பட இருந்த வறுமை, பஞ்சம் என்பன இல்லாமற் போயின. இது சிக்கனத்துக்கும் சேமிப்பிற்குமான அழகிய முன்மாதிரியும் வெற்றிகரமான திட்டமும் ஆகும்.

றாஇத் : ஸேர், எமது அன்றாட வாழ்வில் வீண்விரயமும் ஆடம்பரமும் தானே அதிகம். இதனால்தான் சிக்கனமும் சேமிப்பும் குறைவடைந்து செல்கின்றன?

ஆசிரியர் : நிச்சயமாக, றாஇதின் கருத்துடன் நானும் உடன்படுகிறேன். எமது வாழ்வில் பெரும் பாக்கியங்களாக கிடைக்கப்பெற்றுள்ள நேரம், பணம், நீர், மின்சாரம், பொதுச் சொத்துக்கள் என பலவும் வீண் விரயத்திற்கு உட்படுவதைக் காண்கிறோம். வீண்விரயம் செய்வது ஷைத்தானின் குணமும் பாரதூரமான பாவமுமாகும். இது தொடர்பாக நாம் மறுமையில் விசாரிக்கப்படுவோம். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வுழு செய்யும் போது கூட நீரை வீண்விரயம் செய்வதைத் தடுத்துள்ளார்கள்.

ஸஃத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வுழூ செய்து கொண்டிருந்தபோது அவரைக் கடந்து சென்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஃதைப் பார்த்து, ''ஏன் இவ்வாறு வீண்விரயம் செய்கிறீர்?'' எனக் கேட்டார்கள். ''வுழுவிலும் வீண்விரயம் இருக்கிறதா நபியவர்களே?'' என்று கேட்க, ''ஆம்'' என்று கூறிவிட்டு ''ஓடும் நதியில் நீர் வுழு செய்தாலும் வீண்விரயம் செய்யக்கூடாது'' என்றார்கள். (அஹ்மத், இப்னு மாஜா)

இந்தச் சம்பவம் ஒரு துளி நீர் கூட விரயமாகக்கூடாது என்பதை வலியுறுத்துகிறது. எனவே எமது வீடுகள், பாடசாலைகள், மஸ்ஜிதுகள் முதலான இடங்களில் நீர், மின்சாரம், உணவு போன்ற விடயங்களில் எவ்வாறு விரயத்தைத் தவிர்க்கலாம் என்பதற்கான உதாரணங்கள் சிலவற்றைக் கூறுங்கள் பார்க்கலாம்?

ஆகிப் : மேலதிகமாக ஒளிரும் மின்விளக்கு, மின்விசிறிகளை அணைத்தல், நீர் ஒழுகிக் கொண்டிருக்கும் நீர்க் குழாய்களை இறுக்கமாக மூடிவிடுதல், நீரைப் பாத்திரத்தில் எடுத்துக் குடித்தல், தேவையானளவு உணவை மாத்திரம் பாத்திரத்தில் இடல் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.





ஆசிரியர் : மாஷா அல்லாஹ் ஆகிப். நீங்கள் பொருத்தமான உதாரணங்களைக் குறிப்பிட்டீர்கள். ஜஸாகல்லாஹ் ஹைர். அதேபோல வீணாகவும் கேளிக்கைகளிலும் நேரத்தைக் கழித்தல், பொருத்தமற்ற

வழிமுறைகளில் பணத்தைச் செலவழித்தல், அளவுக்கதிகம் சாப்பிடல், தேவைக்கதிமாக ஆடை அணிகலன்களை கொள்வனவு செய்தல் முதலானவற்றையும் வீண்விரயத்துக்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

ஸைய்யாப் : ஸேர் வீண்விரயமான, ஆடம்பரமான வாழ்வைத் தவிர்த்து சிக்கனத்தையும் சேமிப்பையும் கடைப்பிடிப்பதால் நன்மைகள் கிடைக்குமல்லவா?

ஆசிரியர் : ஆம். நிச்சயமாக இந்தப் பண்புகளை நாம் வளர்ப்பதினூடாக இம்மையிலும் மறுமையிலும் நன்மைகளைப் பெற்றுக்கொள்வோம். சிக்கனம், சேமிப்பு ஆகிய பண்புகள் எமது வாழ்க்கையில் சரியான முறையில் கடைப்பிடிக்கப்படும்போது கடன் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடிகள், மற்றவர்களிடம் தங்கியிருத்தல் போன்ற நிலைமைகள் ஏற்படாமல் எம்மைப் பாதுகாக்க முடியும். அது மன நிறைவான வாழ்விற்கும் வழிவகுக்கும்.

**பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. வீண் விரயம் பாவமாகும் என்பதற்கான ஆதாரம் ஒன்றைத் தருக.
2. சிக்கனம், சேமிப்பின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடும் இஸ்லாமிய வரலாற்றுச் சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுக.
3. யூஸுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களது காலத்தில் ஏற்பட்ட உணவுப் பிரச்சினைக்கு அவர், எவ்வாறு தீர்வு கண்டார்?
4. நீர் வளம் விரயமாவதைத் தடுக்கும் வழிமுறைகள் இரண்டு தருக.
5. சிக்கனம், சேமிப்பு மூலம் கிடைக்கும் நன்மைகள் நான்கைப் பட்டியல்படுத்துக.